
# வாழ்க்கையில் முன்னேறுவதற்கு சில ஆலோசனைகள்



## தொகுப்பு - 1

R. Sivalingam
BA. Dip.In.Edu. Agri.Trd. M.Phill, PGDEM. SLPS-2-11
Deputy Principal, Kotagala T.M.V

- நீ ஏழையானாலும் வேலையை செய்.
- நீ பணக்காரன் ஆனாலும் தொடர்ந்து வேலையை செய்.
- நீ மகிழ்ச்சியாக இருப்பதற்கு வேலையை செய்.
- வேலையற்று இருப்பதால் பயத்திற்கும் சந்தேகத்திற்கும் இடம் கொடுக்கப்படும்; ஆகவே வேலையைச் செய்.
- தாங்கிக் கொள்ளா துயரம் வந்தாலும் உங்களின் அன்புக்குரியவர்கள் உண்மையாக இல்லாவிட்டாலும் வேலையைச் செய்.
- உண்மை வீழ்ந்தாலும் காரணங்கள் தவறானாலும் வேலையைச் செய்.
- எது நிகழ்ந்தாலும் நடந்தாலும் வேலையைச் செய்.
- உண்மையில் உங்கள் வாழ்க்கையே அமர்களமாக இருக்க வேலையைச் செய்.
- வேலையே உடலுக்கும் மூளைக்கும் நிகழ்கின்ற குழப்பங்களை தீர்த்து மனிதனை மேம்படுத்துகிறது.

**தொகுப்பு :- இரா. சிவலிங்கம் -** M.Phill

# முகவுரை

கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது முன்னோர் வாக்கு. மலையக சமூகம் தென்னிந்தியாவில் இருந்து கூலியாக அழைத்து வரப்பட்டு 200 வருடங்கள் கடந்துவிட்டது. இந்த 20 தசாப்த காலங்களில் மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களில் பல முன்னேற்றகரமான படிகளை அடைந்து கொண்டிருக்கின்றோம் என்பது உண்மை. இன்று மலையகம் கல்வித்துறையில் வளர்ச்சியடைந்து வருவதை யாரும் மறுக்க முடியாது.

இருப்பினும் மலையகத்துக்கு இருக்கின்ற ஒரே ஒரு முதலீடு கல்விதான் என்பதை பெற்றோர்களும் சமூகத்திலுள்ளவர்களும் உணர்ந்து கொள்வதுடன், எமது பிள்ளைகளின் எதிர்காலம் கல்வியில்தான் உள்ளது என்பதை புரிந்து கொள்ளவும் வேண்டும். எங்கள் பிள்ளைகளும் படிக்கவேண்டும் உயர் பதவிகளைப் பெற வேண்டும் (வைத்தியர், பொறியியலாளர், வக்கீல், ஆசிரியர்கள், அதிபர்கள், விரிவுரையாளர்கள்) இன்னும் பல பதவிகளை வகிக்க வேண்டும்; எமது பரம்பரை இந்நாட்டின் பொருளாதாரத்தை உயிர்ப்பித்துக் கொண்டிருக்கும் பரம்பரையாகும். நாங்கள் நினைத்தால் முடியாததொன்று இந்த உலகத்தில் இல்லை. கல்விதான் எங்கள் உயிர் மூச்சு.

"முடியாது என்ற வார்த்தை மட்டுமே முடியாது"

**இரா. சிவலிங்கம்**
(B.A. Dip.in.Edu. Agri trd. M.Phill)
SLPS -2 - II
Deputy Principal
CP/N/Kotagala Tamil Maha Vidyalayam
Part Time Lecturer
Govt. Teachers' College,
B.Ed. Cambridge College,
Un Trained non Graduate Teacher
Govt. Teachers' College, Kotagala

## உள்ளடக்கம்


1. முன் பள்ளி கல்வியின் முக்கியத்துவம்.
2. சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகள்.
3. மாணவர்கள் படிப்பதற்கு சில ஆலோசனைகள்.
4. வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியத்தைப் பெறுவதற்குக் கடைபிடிக்க வேண்டிய விடயங்கள்.
5. வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக்கொள்ள பின்பற்ற வேண்டிய விடயங்கள்.
6. பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையில் பெற்றோர்கள் கவனிக்க வேண்டிய விடயங்கள்.
7. பரீட்சைக்கு தயாராகும் மாணவர்கள் கவனிக்க வேண்டியவை.
8. க.பொ.த. உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களில் மாணவர்கள் விடுகின்ற தவறுகள்.
9. பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோர்கள் கவனிக்க வேண்டிய விடயங்கள்.
10. நல்லாசிரியரின் பண்புகள்.
11. நல்ல அதிபரின் பண்புகள்.
12. கற்றலோடு தொடர்புடைய பழமொழிகள் - பொன்மொழிகள்.
13. வாழ்க்கையைப் பற்றி சில விடயங்கள்.
14. மாணவர்கள் வீதியில் செல்லும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்.
15. குடும்பத்தில் கணவன் மனைவி சந்தோசமாக வாழ்வதற்கான சில ஆலோசனைகள்.
16. மது அருந்துவதால் ஏற்படும் பாதிப்புகள்.
17. வாழ்க்கையில் சிக்கனமாக வாழப் பழகவேண்டும்.
18. தூரஇடங்களுக்குப் பிரயாணம் செய்யும்போது பின்பற்ற வேண்டிய விடயங்கள்.
19. கடைபிடிக்க வேண்டிய சுகாதாரப் பழக்க வழக்கங்கள்.
20. கீதாசாரம்
21. ஒரு நல்ல மாணவனுக்கு இருக்க வேண்டிய பண்புகள்.

## ஆசிச் செய்தி

திரு இரா. சிவலிங்கம் எழுதிய இந்நூல் சிறியதெனினும் அறிவாழத்தில் பெரியது. அன்றாடம் வாழ்ந்து கொண்டிருக்கும் எவரும் இப்புத்தகத்திலுள்ள சகல விடயங்களையும் பின்பற்றும் அளவிற்கு மணி மணியாய் ஆக்கியுள்ளார். அத்துடன் ஓர் ஞாபகமூட்டியாகவும் எடுத்துக்கொள்ளலாம். வாசியுங்கள் சிறப்பான வாழ்க்கையை அடைவதற்கு!

சிறப்பாக வாழ்க்கையை அனுபவிக்க வழிகாட்டிய திரு. இரா. சிவலிங்கம் நூலாசிரியருக்கு PREDO பாராட்டி ஆசியையும் வழங்குகிறது.

இருப்பதை கொண்டு
சிறப்புடன் வாழும்
இலக்கணம்படைத்தவன்
இரா.சிவலிங்கம்.

**திரு மைக்கல் R. ஜோக்கிம்**
**தலைவர், பிரிடோ**

**திரு. S.K. சந்திரசேகரன்**
**வெளிக்கள இணைப்பாளர்**
**பிரிடோ**

## ஆசிச் செய்தி

மலையகத்தின் முன்னேற்றம் கல்வியிலேயே தங்கியுள்ளது. கல்விதான் எந்தவொரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கான முதலீடாகும். மலையகம் கல்வித்துறையில் வளர்ச்சியடைந்து வருகின்றது.

இந்த வளர்ச்சிக்கு அயராது உழைக்கும் ஆசிரிய பெருந்தகைகளின் சேவையை பாராட்ட வேண்டியது சமூகத்தின் கடமையாகும். நாளைய மலையகத்தின் வளர்ச்சி இன்றைய மாணவர்களின் செயற்பாடுகளில்தான் தங்கியிருக்கின்றது.

இந்த வகையில் திரு. இரா.சிவலிங்கம் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறி வந்துள்ளார். அவர் வீரகேசரி, தினகரன், சூரியகாந்தி, புது யுகம், தினக்குரல் போன்ற பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் தொடர்ச்சியாக வாழ்க்கையில் முன்னேறுவதற்கு சில ஆலோசனைகள் என்ற அவரது நூலானது சிறியதாக இருந்தாலும் அதில் ஆக்கபூர்வமான விடயங்களைத் தாங்கி வருகின்றது. இவருக்கு எனது பாராட்டுகள். இப்புத்தகத்தை மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் வாசித்து பயன்பெறவேண்டும்.

"முயற்சி திருவினையாக்கும்"

**திரு. A. ஜெயராஜ்**
**வூட்டன் A. எஸ்டேட்,**
**உரிமையாளர்.**

## முன் பள்ளி கல்வியின் முக்கியத்துவம்

1. ஆரம்பக் கல்விக்கான சிறந்ததொரு இடம்.
2. புலன்கள் வாயிலாக அனுபவங்களைக் கற்றுக்கொள்ளும் பருவம்.
3. மகிழ்ச்சியான சூழலில் பிள்ளை பாதுகாப்புடன் வளரும்.
4. நற்பண்புகளையும் நல்லொழுக்கங்களையும் சிறுவயதிலேயே பெற்றுக் கொள்வதற்கு உதவும்.
5. நல்ல சுகாதார பழக்கவழக்கங்களையும் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்.
6. நற்குணங்களை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பேற்படும்.
7. அறிவு, மனப்பாங்கு என்பன சிறந்த முறையில் வளரும்.
8. உடல் வளர்ச்சி அடைவதற்கான செயற்பாடுகளை செய்ய உதவும்.
9. தினசரி கடமைகளை முறையாக செய்வதற்கு உதவும்.
10. சூழலைப் பழகுதல், ரசித்தல், விரும்புதல், பாதுகாத்தல் போன்ற பன்புகளை பெற்றுக்கொள்ளமுடியும்.
11. பாடசாலைக் கல்வியை மிக சந்தோசத்துடன் தொடர்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.
12. பிள்ளையின் மொழி விருத்தியை (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) அதிகரிப்பதற்கு சிறந்த பருவம்.
13. பிள்ளைகளிடம் காணப்படும் திறமைகளை இனங்கண்டு வளர்க்கமுடியும்
14. சரீர வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, நுண்ணறிவு வளர்ச்சி, மொழி விருத்தி, சமூகஞ்சார் விருத்தி, இசைவான வாழ்க்கை போன்ற விடயங்களை வளர்ப்பதற்கு பொருத்தமான இடம்.
15. ஆடல், பாடல், விளையாட்டுக்களில் ஈடுபடலாம்.
16. அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு உகந்த இடம்.
17. கேட்ட கேள்விக்கு சரியான பதிலளித்தல்.
18. குழுக்களுடன் சேர்ந்து விளையாடுதல், வேலை செய்தல்.
19. பிறருக்கு உதவி செய்தல்.
20. தனியாக ஒரு வேலையில் ஈடுபடுதல்.
21. வரைதல், கிறுக்குதல், எழுதத் தொடங்குதல்
22. சுத்தமாய் இருக்க முயற்சித்தல்.
23. அடிப்படை நிறங்களை இனங்காணுதல்.
24. பிள்ளைகளின் சுய ஆற்றல், சுய சிந்தனை, திறன்கள் ஆகியவற்றை வளர்ச்சியடைய செய்யும் இடம்.

ஐந்து வயதுக்குள் பிள்ளையின் மூளை வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

## சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகள்

- தினமும் 5 மணித்தியாலங்கள் படிக்க வேண்டும்.
- அன்றைய பாடங்களை அன்றே படிக்க வேண்டும்.
- மனதை ஒரு நிலைப்படுத்திப் படிக்க வேண்டும்.
- படிக்கும்போது வேறு விடயங்களில் கவனம் செலுத்தக்கூடாது.
- தொலைக்காட்சி பார்ப்பதைக் கூடுமானவரை குறைக்கவேண்டும். (நல்ல நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துப் பார்க்கவேண்டும்)
- வானொலி கேட்டுக் கொண்டு படிக்கக் கூடாது.
- எல்லாப் பாடங்களையும் சராசரியாகப் படிக்கவேண்டும்.
- ஆர்வத்துடனும் வைராக்கியத்துடனும் படிக்கவேண்டும்.
- நல்ல இலட்சியத்தோடு படிக்கவேண்டும்.
- நோக்கம் சிறப்பாக இருக்கவேண்டும்.
- பெற்றோருடைய நிலையை உணர்ந்து படிக்கவேண்டும்.
- பொறுப்புடன் படிக்கவேண்டும்.
- படிக்கின்றபோது தேவையற்ற வேலைகளைச் செய்வதை தவிர்க்க வேண்டும்.
- சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் அநுபவங்களைக் கேட்கவேண்டும்.
- நல்ல நண்பர்களுடன் பழகவேண்டும்.
- படிப்பதில் போட்டி இருக்கவேண்டும்.
- விடயங்களைத் தேடிப் படிக்கவேண்டும்.
- தினமும் வாசிக்கவேண்டும்.
- கூடுமானவரை பாடசாலை நேரத்தினைப் படிப்பதற்கு பயன்படுத்த வேண்டும்.
- சகல பாடங்களிலும் பயிற்சிகள் செய்துபார்க்கவேண்டும்.
- முழு நம்பிக்கையுடன் படிக்கவேண்டும்.
- தெரியாதவற்றைத் தெரிந்தவரிடம் கேட்டுப் படிக்கவேண்டும்.
- எதிர்கால உலகத்திற்கேற்ப கற்கப் பழகவேண்டும்.
- படிக்கின்றப் புத்தகங்களையும், பயிற்சிக் கொப்பிகளையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.
- அதிகமான அளவு மாதிரி வினாத்தாள்களை செய்துபார்க்கவேண்டும்.
- ஆசிரியர்கள் வழங்கும் பாடம் தொடர்பான குறிப்புகளை முறையாக எழுதவேண்டும்.
- பெரியோர்கள், ஆசிரியர்கள் போன்றோரை மதிக்கவேண்டும்.
- கடவுள் நம்பிக்கை வேண்டும்.
- இலக்கை அடைவதற்கான சகல முயற்சிகளிலும் ஈடுபடவேண்டும்.

## மாணவர்கள் படிப்பதற்கு சில ஆலோசனைகள்

1. நேர அட்டவணை தயாரித்துப் படிக்கவேண்டும்.
2. படித்தவற்றை மீண்டும் மீண்டும் படிக்கவேண்டும். விடயங்களை எழுதிப் படிக்கவேண்டும்.
3. அட்டவணைகள், வரைபடங்கள் என்பவற்றைத் தொடர்ந்து தயாரித்தும் வரைந்தும் பார்க்கவேண்டும்.
4. சிறு சிறு குறிப்புக்கள் எழுதிப் பார்க்கவேண்டும் (Short Notes)
5. படிக்கும் பாடங்கள் சம்பந்தமாகப் புதிய விடயங்களைத் தேடிப் படிக்க வேண்டும்.
6. தேசியப் பரீட்சைக்கு ஏற்றவாறு விடயங்களைத் தேடிப்படிக்கவேண்டும்.
7. கூடுமானவரை விளங்கிப் படிக்கவேண்டும்.
8. சந்தேகங்களை உடனுக்குடன் கேட்டு தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்.
9. பிறரின் வற்புறுத்தலின் பெயரில் படிக்கக்கூடாது.
10. படிக்கின்ற மனநிலையை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.
11. ஒரே வகுப்பை சேர்ந்தவர்கள் ஒன்றாக இருந்து படிக்கவேண்டும்.
12. படிக்கின்றச் சூழலை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.
13. அதிகமான மாதிரிப் பரீட்சைகளைச் செய்து பார்க்கவேண்டும்.
14. இணையம் மூலம் தகவல்களைத் திரட்டிப் படிக்கவேண்டும்.
15. முடியுமானவரை சுயமாகப் படிக்கவேண்டும் (Self - study)
16. படிக்கின்ற நேரத்தில் முழுக் கவனத்தையும் பாடத்தில் செலுத்த வேண்டும்.
17. மனத்தில் பிரச்சினைகளோடு படிக்கத் தொடங்கக்கூடாது.
18. படித்துப் பாடமாக்கிய விடயங்களை மீண்டும் மீண்டும் படிக்ககூடாது.
19. படிக்கும்போது அடிக்கோடுகள் போட்டுப்(underline,highlight) படிக்கவேண்டும்.
20. அதிக கணக்குகளைச் செய்துபார்க்கவேண்டும்.
21. வினாத்தாள்களைத் தானே தயாரித்துப் பழகவேண்டும்.
22. உத்தேசமாக அல்லது எழுமாறாக பாடப் பகுதிகளை படிக்ககூடாது.
23. படிக்கும்போது காலை ஆட்டிக்கொண்டு, தலையில் கையை வைத்துக்கொண்டு படிக்ககூடாது.
24. முழுப் பாடத்திட்டத்தையும் உள்ளடக்கியவாறு படிக்கவேண்டும்.
25. படிப்பதற்கு முன் தியானம் செய்தல் அல்லது மனத்தை ஒரு நிலைப் படுத்தல் வேண்டும்.
26. சரியான விடயங்களை தேடிப் படிக்கவேண்டும்.
27. படிக்கின்ற நண்பர்களுடன் சேர்ந்து படிக்கவேண்டும்.

## வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியத்தைப் பெறுவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள்

- இலட்சியத்தை தெளிவாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.
- இலக்குகள் உறுதியாகவும், சிறப்பாகவும் இருக்கவேண்டும்.
- இலக்கானது காலத்திற்கும், சமூகத்திற்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.
- இலக்கை அடைந்து கொள்வதற்கான சகல வழிவகைகளையும் இனங்காணவேண்டும்.
- இலக்குகளில் காணப்படும் தடைகளையும், பிரச்சினைகளையும் விளங்கிக் கொள்ளவேண்டும்.
- தடைகளையும், பிரச்சினைகளையும் தீர்க்கும் வழிமுறைகளை இனங்காணவேண்டும்.
- தகுதிக்கும், பொருளாதார சூழலுக்கும் ஏற்றவாறு இலக்குகளை தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.
- இலக்குகளை அடைவதற்காக எவ்விதமான பிழையான நடவடிக்கைகளிலும் நடத்தைகளிலும் ஈடுபடக்கூடாது.
- இலக்கை அடைந்து கொள்ளுவதற்கு ஏற்ப தன்னுடைய வாழ்க்கை முறைகளையும், பழக்க வழக்கங்களையும் மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும்.
- இலக்கை அடைந்து கொள்வதற்குப் போராடும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.
- இலக்கை அடைவதற்காக எவ்விதமான தோல்விகளையும் வெற்றிப் படிகளாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.
- இலக்கை அடையும்போது கேலிப் பேச்சு, பொறாமை, போட்டிகள், தடைகள், தடங்கல்கள் யாவற்றையும் பொறுத்துக் கொள்ளவேண்டும்.
- வாழ்க்கையில் தங்களுடைய இலட்சியத்தை அடைந்தவர்களின் வாழ்க்கை வரலாற்றை முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும்.
- இலக்கை அடைவதற்காக சகல நல்ல முயற்சிகளிலும் ஈடுபடவேண்டும்.
- இலக்கை அடையும்வரை சலிப்படையவோ, தடுமாறவோ, தடம்மாறவோ கலங்கவோ கூடாது.
- இலக்கானது வாழ்க்கையோடும், உலக மாற்றத்தோடும் தொடர்பு பட்டதாக இருக்கவேண்டும்.
- இலக்கை அடைவதற்கு விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் கடவுள்

ஐந்து நிமிடங்கள் யாரிடம் பேசினாலும் பேசுபவர்களுக்கு அல்லது பேச்சைக் கேட்பவர்களுக்கு ஏதாவது நன்மை இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அந்த ஐந்து நிமிடம் வீணான நேரமாகும்.

## வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக்கொள்ள பின்பற்ற வேண்டிய விடயங்கள்

- தாய் தந்தை, குருவை வணங்கவேண்டும்.
- கடவுள் வழிபாட்டில் தினமும் ஈடுபடவேண்டும்.
- கற்பித்த ஆசிரியர்களையும் பெரியோரையும் மதிக்கவேண்டும்.
- படித்தப் பாடசாலைகளை நேசிக்கவேண்டும்.
- உதவி செய்த நண்பர்களை மறக்கக்கூடாது. நன்றி மறக்கக்கூடாது.
- மனம் போன போக்கில் போகக்கூடாது. பிறர் மனம் புண்படும்படி பேசக் கூடாது.
- உற்றார் உறவினர்களை மறக்கக் கூடாது. அயலவர்களுடன் அன்பாகப் பழகவேண்டும்.
- இயலாது என்பது சோம்பேறிகளின் வார்த்தை. பிறர்மீது குறை காணாதே.
- எதையும் அலட்சியப்படுத்தக்கூடாது. நேரத்தை வீணாக்கக்கூடாது.
- தெரியாமல் செய்த தவறுகளுக்காக மன்னிப்பு கேட்கவேண்டும்.
- தீய நண்பர்களுடன் சேர்ந்து தீய பழக்கங்களைப் பழகக்கூடாது.
- உழைத்து வாழ முயற்சிக்கவேண்டும்.
- வாழும் காலத்தில் பிறர்க்கு உதவி செய்யவேண்டும்.
- வாழ்நாள் முழுவதும் கல்விக் கற்கவேண்டும்.
- விடா முயற்சியும் நம்பிக்கையும் மனவுறுதியும் இருக்கவேண்டும்.
- பொய், களவு, கொலை, சூது, புலால் உண்ணல் போன்ற பஞ்சமா பாதகங்களைச் செய்யக்கூடாது.
- பிறருடையச் சொத்துக்களுக்கு ஆசைப்படக்கூடாது.
- எதையும் இழந்துவிட்டுத் தேடுவதை விட, இழக்காமல் இருப்பதே மேல்.
- வாழ்க்கையில் செய்த நண்மை தீமைகளுக்கு ஏற்ப தண்டணைகளும் உண்டு என்பதை உணரவேண்டும்.
- எல்லா உயிர்களிடத்திலும் அன்பாக இருக்கவேண்டும்.
- இயற்கையை இரசிக்கப் பழகவேண்டும்.
- ஏழைகளுக்கு உதவவேண்டும்.
- எந்த தொழிலையும் குறைத்து மதிப்பிடக்கூடாது. (செய்யும் தொழிலே தெய்வம்)
- எதனையும் செய்யமுடியும் என்ற மனவுறுதி வேண்டும்.
- வாழ்க்கையை வாழ்ந்து காட்டவேண்டும்.
- வாழ்க்கையில் வரும் பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டும்.
- துன்பங்களையும் பிரச்சினைகளையும் கண்டு சோர்வடையக்கூடாது.
- கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வாழவேண்டும்.
- எந்தச் சூழ்நிலையிலும் வாழப்பழகிக் கொள்ளவேண்டும்.
- ஆடம்பர வாழ்க்கையென்பது போலியானது என்பதை உணரவேண்டும்.
- படிக்கின்ற காலத்திலேயே ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும்.
- பிறருக்கு சுமையாக வாழக்கூடாது.

## பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையில் பெற்றோர்கள் கவனிக்க வேண்டிய விடயங்கள்

- வீட்டில் படிப்பதற்கான சூழலை உருவாக்கி கொடுக்கவேண்டும்.
- படிக்கின்றபோது வேறு வேலைகளைப் பெற்றோர்கள் கொடுக்கக் கூடாது.
- படிக்கின்றபோது எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
- பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்கள் கூடிய ஆர்வமும், கவனமும் செலுத்தவேண்டும்.
- படிக்கின்றதற்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடுக்கவேண்டும்.
- பெற்றோர்கள் வீண் செலவுகளைத் தவிர்த்து பிள்ளைகளின் கல்விக்கு செலவு செய்யவேண்டும்.
- எதிர்காலத்தில் பிள்ளைகளின் கல்விக்காக சேமிக்கவேண்டும்.
- பெற்றோர்கள் எந்த சூழ்நிலையிலும், தங்கள் பிள்ளைகளை எக்காரணங் கொண்டும் வீட்டு வேலைகளுக்கு அனுப்பக்கூடாது.
- கட்டாயம் தினமும் பாடசாலைக்கு அனுப்பவேண்டும். பாடசாலையுடனும், பாட ஆசிரியர்களுடனும் தொடர்புகளை வைத்துக்கொள்ளவேண்டும்.
- பிள்ளைகளின் பாடக் கொப்பிகளைத் தினமும் பார்க்க (பரீட்சிக்க) வேண்டும்.
- பிள்ளைகளின் நடத்தையிலும், நடவடிக்கையிலும் மாற்றங்கள். ஏற்பட்டால் உடனே அது விடயமாக கவனிக்கவேண்டும்.
- பிள்ளைகள் தொடர்ச்சியாக கற்பதற்கு வழி செய்து கொடுக்கவேண்டும்.
- பிள்ளைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களை வீட்டிலேயே சொல்லிக் கொடுக்கவேண்டும்.
- பெரியோர்களையும், ஆசிரியர்களையும் மதிக்கச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.
- பிள்ளைகளின் தவறான நடத்தைக்குப் பெற்றோர்கள் முன்மாதிரியாக இருக்கக்கூடாது.
- பிள்ளைகள் வீட்டில் படிப்பதை உறுதிசெய்யவேண்டும்.
- பிள்ளைகளுக்கு பெற்றோர்களின் நிலைமைகளை உணர்த்தவேண்டும்.
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்ப்பதைக் குறைத்துக் கொள்வதோடு வானொலி கேட்பதையும் இயன்றவரை குறைத்துக் கொள்ளவேண்டும்.
- கூடுமானவரை ஆடம்பர விடயங்களில் பிள்ளைகள் ஈடுபடுவதற்கு அனுமதிக்கக் கூடாது.
- பிள்ளைகளின் நண்பர்களை கண்காணிக்கவேண்டும்.
- பிள்ளைகளின் கல்வி பற்றிய விடயங்களில் அனுபவம் வாய்ந்தவர்களிடம் ஆலோசனை கேட்கவேண்டும்.
- பிள்ளைகள் சொல்வதை ஆராயாமல் எந்த முடிவையும் எடுக்கக்கூடாது.
- பிள்ளைகளை மிகவும் வற்புறுத்திப்படிக்கச் சொல்லக்கூடாது; அவர்களாகவே உணர்ந்து படிக்க வழிசெய்யவேண்டும்.
- ஏனைய பிள்ளைகளோடு ஒப்பிட்டு தங்களுடைய பிள்ளைகளைப் பேசக்கூடாது.
- பிள்ளைகளுக்கு விலையுயர்ந்த கையடக்கத் தொலை பேசியை வாங்கிக் கொடுக்கக்கூடாது.

## பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் கவனிக்கவேண்டியவை

- இரண்டு வருடங்கள் தொடர்ந்து கற்றதை மூன்று மணித்தியாலங்களில் பரீட்சிக்கப் போகின்றார்கள். எனவே இறுதித் தேர்வு முக்கியம் என்பதை உணரவேண்டும்.
- பரீட்சைக்கு முன் சகல பாடங்களையும் தெளிவாகக் கற்றுக்கொள்ள வேண்டும்.
- சந்தேகங்களையும்,விளங்காத விடயங்களையும் மற்றும் தெளிவு இல்லாத வற்றையும் பரீட்சைக்கு முன் கேட்டு அறிந்துகொள்ளவேண்டும்.
- இறுதி நேரத்தில் அவசரமாக படிக்கக்கூடாது.
- நாளை படிக்கலாம், பின்னர் படிக்கலாம் இந்த பகுதியில் வினாக்கள் வராது என எதையும் தள்ளிப்போடக்கூடாது.
- கடந்தகால பரீட்சை வினாக்களை அதிகமாகச் செய்துபார்க்கவேண்டும்.
- Paper class, Group class, Tute Class, Seminars போன்றவற்றிக்கு பரீட்சைக்கு முன்னரே செல்லவேண்டும்.
- பரீட்சை நெருங்கும்போது பிற வேலைகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். (T.V பார்த்தல், பொழுது போக்கு, நண்பர்களுடன் சுற்றுதல், தேவையற்ற விடயங்களில் ஈடுபடுதல்)
- பரீட்சைக்கு முன் தினமும் காலையில் படிப்பதை வழக்கமாகக் கொள்ள வேண்டும்.
- கற்ற விடயங்களையும், நுணுக்கமான விடயங்களையும் குறிப்பு எடுக்க வேண்டும். (சிக்கலான விடயங்கள், சமன்பாடுகள், தீர்வு முறைகள்)
- பரீட்சை நேரத்தில் உணவு விடயங்களில் கவனமாக இருக்கவேண்டும். உடல் ஆரோக்கயம் முக்கியம்.
- பரீட்சை அனுமதி அட்டை, அடையாள அட்டை, எழுது உபகரணங்கள் நேர அட்டவணை போன்றவற்றை கொண்டுசெல்லவேண்டும்.
- பரீட்சை மண்டபத்திற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னரே செல்லவேண்டும்
- பரீட்சை மண்டபத்திற்கு நீர், பனடோல், தைலங்கள், உணவு, காசு என்பனவற்றை கொண்டுசெல்லவேண்டும்.
- உடை உடல் தூய்மையாக இருக்கவேண்டும்.
- பதற்றம், சோர்வு, பயம், கவலை, தூக்கம் போன்றவற்றை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
- மன உறுதி, நம்பிக்கை, நல்ல பெறுபேறு எடுப்பேன் என்ற மனநிலை இருக்க வேண்டும்.
- நன்றாக தெரிந்த வினாக்களை முதலில் எழுதவேண்டும்.
- வினா இலக்கம், சுட்டெண் போன்றவற்றை தெளிவாக எழுதவேண்டும்.
- பிறரின் விடைகளை பார்த்து எழுதுவது, விடைத்தாள்களைப் பறித்து எழுதுவது, பிறரை நம்பி பரிட்சைக்குச் செல்வது கூடாது.
- பரீட்சைக்கு ஆயத்தமில்லாமல் பரீட்சைக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.
- பரீட்சையில் சிறந்த பெறுபேறு கிடைக்கும் என்ற முழு நம்பிக்கையில் பரீட்சையை எழுதவேண்டும்.
- விடா முயற்சி, கடவுள் நம்பிக்கை, தன்னம்பிக்கை, ஆர்வம், இலக்கு, நோக்கம், இலட்சியம், ஆசீர்வாதம் போன்ற அனைத்தும் இருக்க வேண்டும்.

## க.பொ.த உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களில் மாணவர்கள் விடுகின்ற தவறுகள்

- எழுத்துக்கள் தெளிவின்மை - கவனக் குறைவு.
- வினாக்களை தெளிவாக வாசிக்காமை.
- பரீட்சையின்போது பதற்றம் அடைதல்.
- நேர முகாமை இன்மை.
- ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்பட்டுள்ள புள்ளிகளைக் கவனிக்காமை.
- வினாக்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளாமை.
- வினா இலக்கம் போடாமை. பக்கங்கள் ஒழுங்குபடுத்தாமை.
- வினாப்பத்திரங்களில் தேவையற்ற விடயங்களை எழுதுதல்.
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுதல்.
- பிரதான வினாக்களின் பகுதிகளுக்கு மட்டும் விடை எழுதுதல்.
- சமன்பாடுகள், சூத்திரங்களை சரியாகப் பயன்படுத்தாமை.
- அறிவுறுத்தல்களைக் பின்பற்றாமை.
- வினாக்களை எழுந்தமானமாக வாசித்தல், மேலோட்டமாக வாசித்தல் ஆல், ஆக என்பவற்றைக் கவனிக்காமை.
- முதலாவது வினாவை முதலாவதாகச் செய்தல். அதை விட வேறு வினாக்கள் இலகுவாக இருக்கலாம்.
- அறிவுறுத்தல்களைக் கவனிக்காமை.
- விடைத்தாள்களைத் திருப்பிப் பார்ப்பது குறைவு.
- விளங்கிப் படிக்காமை.
- கணித பாடத்தை ஆரம்பப் பிரிவிலிருந்து முறையாகப் படிக்காமை.
- கணித எண்ணக்கருக்களின் விளக்கம் குறைவு.
- கணித பாடத்தை பாடமாக்கி படிக்கமுடியாது.
- வரைவிலக்கணம் கேட்டால் சரியாக எழுதவேண்டும்.
- விதிகள், கோட்பாடுகள், எண்ணக்கருக்களை மிகச் சரியாக எழுதவேண்டும்
- கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் எழுதுதல்-ஏனோ தானோ என்று எழுதுதல்.
- வரைவிலக்கணங்கள், விதிகள், சூத்திரங்கள், கோட்பாடுகளை சரியாக எழுதாமை.
- தேவையான இடங்களில் வரிப்படங்கள் வரைபடங்களை வரையாமை.
- மிக நன்றாகவும், முழுமையாகவும் தெரிந்த வினாக்களை தெரிவு செய்து எழுதவேண்டும்.
- ஒரு வினாவில் 4 அல்லது 5 பிரிவுகள் (I, II. III. IV,V) இருந்தால் அதில் இரண்டு பிரிவுகளுக்கு மட்டுமே விடை தெரிந்தால் அவ்வினாவை தெரிவு செய்தல் - இவ்வாறு தெரிவு செய்தால் முழுமையான புள்ளி கிடைக்காது என்பதை உணராமை.
- ஒவ்வொரு வினாக்களின் பகுதிகளுக்கும் புள்ளிகள் கொடுக்கப்பட்டிருக்கும் இப்புள்ளிகளுக்கு ஏற்றவாறு விடைகளை எழுத வேண்டும்.உதாரணத்திற்கு 1 புள்ளி வழங்கப்பட்டிருந்தால் அதற்கேற்றவாறு மிகச் சுருக்கமாக சரியான விடையை எழுதவேண்டும்.

## பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோர்கள் கவனிக்கவேண்டிய விடயங்கள்

- நல்ல பழக்கவழக்கங்களைச் சொல்லிக்கொடுக்கவேண்டும்.
- அவர்களுக்கு தேவையானவற்றை வாங்கிக்கொடுக்கவேண்டும்.
- நல்ல போசாக்கான உணவுகளைப் பெற்றுக் கொடுக்கவேண்டும்.
- உடற் சுகாதாரம், சுகாதாரப் பழக்கவழக்கங்களைச் சொல்லிக்கொடுக்க வேண்டும்.
- தொடர்ந்து அவர்களுக்கு நல்ல வழிகளைக் காட்டவேண்டும்.
- தொடர்ந்து அவர்களின் நடவடிக்கைகளைக் கவனிக்கவேண்டும்.
- பெண் பிள்ளைகளுக்கு அளவுக்கு அதிகமான செல்லங்கொடுக்கக் கூடாது.
- ஆடம்பர வாழ்க்கைக்குப் பிள்ளைகளைத் தயார் படுத்தக்கூடாது.
- பிள்ளையோடு அன்பாகப் பேசவேண்டும்.
- பிள்ளைகளின் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்யவேண்டும்.
- பிள்ளைகளின் தவறான நடத்தைகளுக்கு பெற்றோர்கள் துணையாக இருக்கக்கூடாது.
- அந்தந்த வயதில் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும்.

"பிள்ளைகளின் கல்வியில் பிள்ளைகள் அக்கறை காட்டுவதுபோல், ஆசிரியர்கள் அக்கறை காட்டுவதுபோல், பெற்றோர்களும் அக்கறை காட்டுவது அவசியமாகும். நீங்கள் இந்த நாட்டை கற்ற நாடாக மாற்றுவதற்கு பாடசாலை நடவடிக்கைகளில் பங்கேற்க வேண்டும்.

பாடசாலைகளுக்கு ஆதரவு வழங்கவேண்டும். பாடசாலைகளை வன்முறையாளர்களிடம் இருந்து பாதுகாக்கவேண்டும். ஆசிரியர்களோடும் மாணவர்களோடும் ஒன்றாகச் செயற்படடு அவர்களுக்கு ஒத்தாசை வழங்க வேண்டும். உங்களுடைய பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலை வருவதையும், பாடசாலை வேலைகளை ஒழுங்காகச் செய்வதையும் நீங்கள் உறுதிசெய்யவேண்டும். உங்களுடைய பாடசாலைகள் போதைப் பொருள் பாவனையாளர்களால் ஆக்கிரமிக்கப்படும்போதும், பாடசாலையின் பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் வன்முறையாளர்களால் அழிக்கப்படும்போதும், வெறும் பார்வையாளர்களாகப் பார்த்துக் கொண்டு இருக்கமுடியாது. எங்களுடைய நாட்டின் பிள்ளைகள் அறியாமையினாலும், திறன்களைப்பெற முடியாமையினாலும் பயனற்ற மனிதர்களாவதை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எங்களுடைய பாடசாலைகள் எங்களுக்காக செயற்படுவதை உறுதி செய்வோம்"

(நெல்சன் மன்டேலா, 2009)

## நல்லாசிரியரின் பண்புகள்

- தினமும் வாசிக்கவேண்டும். தினமும் பாடசாலைக்குச் செல்லவேண்டும்.
- மாணவர்களைப் புரிந்துகொண்டு கற்பிக்கவேண்டும்.
- மாணவர்களின் குடும்பச் சூழல், பின்னணி பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.
- கற்பிக்கும் பாடங்களை முன்னாயத்தமாக்கிய பின் வகுப்பறைக்குச் செல்லவேண்டும்.
- பாடக் குறிப்பு, பாடத்திட்டத்தைத் தயாரித்துக் கொள்ளவேண்டும்.
- மாணவர்களுக்கு விளங்கக் கூடிய வகையில் கற்பிக்கவேண்டும்.
- மாணவர்களின் முன்னேற்றத்தில் கூடிய அக்கறைகாட்டவேண்டும்.
- பாடசாலை நிருவாகத்திற்கு முழு ஒத்துழைப்பயையும் வழங்கவேண்டும்.
- கற்பித்தல் தொழிலை விருப்பத்துடன் செய்யவேண்டும்.
- தொழிலின் கௌரவத்தையும், மகிமையையும் காப்பாற்ற முயற்சிக்க வேண்டும்.
- சமூகத்தில் முன்மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் நடந்துகொள்ள வேண்டும்.
- சமூகத்திற்கு ஆலோசனை சொல்லக் கூடியவராக இருக்கவேண்டும்.
- நடை, உடை, பேச்சு போன்றவற்றில் ஒரு நேர்த்தி இருக்கவேண்டும்.
- கற்பித்தலுக்கு தேவையான புதிய விடயங்களை தேடவேண்டும்.
- மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும் - மாணவர்கள் இல்லாமல் பாடசாலையும் வேதனமும் இல்லை என்பதை உணரவேண்டும்.
- எவ்வித பாகுபாடுகளும் இன்றி மாணவர்களுக்கு கற்பிக்கவேண்டும்.
- மாணவர்களின் திறமைகளை இனங்கண்டு வெளிக்கொண்டுவரவேண்டும்.
- மாணவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்குவதைத் தவிர்க்க வேண்டும்.
- வகுப்பறையில் தேவையற்ற விடயங்களைக் கலந்துரையாடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.
- பாடசாலையைப் பொழுது போக்கும் இடமாகப் பயன்படுத்தக்கூடாது.
- பாடசாலை நேரத்தில் கற்பித்தல் நடவடிக்கையில் முழுமையாக ஈடுபட வேண்டும்.
- கற்றலில் பின்தங்கிய மாணவர்களுக்கு விசேடவேலைத்திட்டங்களைச் செய்யவேண்டும்.
- சமூகத்தின் வளர்ச்சிக்காக தனது பணியை அர்ப்பணிக்கவேண்டும்.
- ஆசிரியத் தொழிலுக்கு பங்கம் ஏற்படாதவாறு நடந்துகொள்ளவேண்டும்.
- புதிய கற்றல் முறைகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டும்.
- தொழில் தகமைகளையும், கல்வித் தகைமைகளையும் உயர்த்தி கொள்ளவேண்டும்.
- இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்.
- விளையாட்டு, இயல், இசை, நாடகம் போன்றவற்றில் ஈடுபாடு இருக்கவேண்டும்.
- ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் தேர்ச்சிபெறவேண்டும்.
- உயர் கல்வித் துறையில் ஈடுபடவேண்டும்.
- ஆசிரியத் தொழில் ஒரு புனிதமான தொழில் என்பதை உணரவேண்டும்.
- முற்பிறவியில் புண்ணியம் செய்தவர்களே ஆசிரியர்களாக வரமுடியும்.

"கல்வி பெறுவதற்காக உங்கள் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருப்பவர்களின் நலனைக் காப்பதற்கு நீங்கள் உங்களை முழுமையான முறையில் அர்ப்பணித்துக்கொள்ளவேண்டும். அவற்றிலே முதன்மையானது நேரம் தவறாமை. உங்களுடைய பாடங்களை சிறப்பான முறையில் தயார்படுத்துவதாகும். ஒவ்வொரு பாடத்திலிருந்தும் மாணவர்கள் எதையாவது கற்றுக்கொள்வதை உறுதிசெய்வது கடமையாகும். உங்களுடைய பாடவிதானத்தில் அபிவிருத்திகாகான வழிகாட்டுதல் இருக்கவேண்டும். சக பணியாளர்களோடும், பாடசாலை முகாமைத்துவத்தோடும் கூட்டுறவோடு செயற்பட்டு உங்களுடைய பாடசாலைகள் தேசத்திற்கே கற்பிக்கும் நிலையங்களாக ஆவதை உறுதிசெய்யவேண்டும். உங்களுடைய பணியில் அதி உயர்ந்த தரத்தைப் பேணுவதுடன் ஆசிரியர் சேவையின் மாண்பையும் உச்சநிலையில் பாதுகாக்கவேண்டும். நீங்கள் உங்களுடைய பிள்ளைகளைக் கைவிட்டால் நீங்கள் நாட்டையே கைவிடுகிறீர்கள் என்று அர்த்தம்". **(நெல்சன் மண்டேலா 2009)**

## நல்ல அதிபரின் பண்புகள்

- நேரத்திற்குப் பாடசாலைக்குச் செல்லுதல் வேண்டும்.
- பாடசாலையில் வேலை செய்வுதற்கு முழு ஆயத்தத்துடன் செல்லுதல்.
- பாடசாலைக்கு விருப்பத்துடன் செல்லுதல்.
- பாடசாலையில் வேலை செய்கின்ற ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் போன்றோருடன் சுமுகமாகப் பழகுதல்.
- சகல மாணவர்களுடனும் அன்பாகப் பழகுதல் (மாணவர்களை நேசித்தல்)
- திறமையான மாணவர்களைப் பாராட்டுதல் வேண்டும்.
- அன்றாடக் கடமைகளை நேர்த்தியாக செய்யவேண்டும்.
- எல்லா வேலைகளையும் நேர்த்தியாகச் செய்யவேண்டும்.
- கடிதங்களை முறையாக ஆவணப்படுத்தல்.
- கடிதங்களுக்கும், சுற்று நிருபங்களுக்கும் உடனே பதில் கடிதம் எழுதுதல்வேண்டும்.
- பாடசாலைச் சொத்துக்களைப் பாதுகாத்தல்வேண்டும்.
- பாடசாலை நேரங்களில் வெளி வேலைகளைத் தவிர்த்தல்.
- பாடசாலையில் கல்விச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தல்.
- வெளியாளர்களின் தலையீட்டைக் கூடுமானவரை குறைத்தல் வேண்டும்.
- எந்த பிரச்சினையாக இருந்தாலும் கலந்துரையாடல் மூலம் தீர்க்கவேண்டும்.
- சிறு சிறு தவறுகளைத் திருத்திக்கொள்ளல்.
- வகுப்பறை நிருவாகத்தை முழுமையாகக் கண்காணித்தல்.

- ஆசிரியர்களின் வகுப்பறைக் கற்பித்தல் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல்.
- பாடசாலைக்கு மனிதவளம், பௌதிக வளங்களைத் தேடல்வேண்டும்.
- பாடசாலைப் பெற்றோர் சங்க கூட்டங்களைத் தொடர்ந்து நடத்துதல்.
- ஆசிரியர் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்துதல்.
- பாடசாலை விளையாட்டுப் போட்டியை நடாத்துதல் மாவட்ட, மாகாண போட்டிகளுக்கு மாணவர்களை அனுப்புதல்.
- தமிழ் தினப் போட்டிகளில் மாணவர்களைப் பங்குபற்றச் செய்தல்.
- அதிபர் லீவு எடுப்பதை முடியுமானவரை குறைத்துக் கொள்ளல்.
- வீட்டுப் பிரச்சினைகளையும், வெளிப் பிரச்சினைகளையும் பாடசாலைக்குள் கொண்டு செல்லாமல் இருத்தல்.
- பாடசாலை நிருவாகம் சம்மந்தமாக சந்தேகங்கள் ஏற்படும்போது அனுபவமுள்ளவர்களிடம் ஆலோசனை கேட்டல்.
- புதிய வேலைத்திட்டங்களை காலத்திற்கு ஏற்றமாதிரி அறிமுகப்படுத்தல்.
- ஆசிரியர்களின் தகுதிக்கும் திறமைக்கும் முக்கியத்துவம் கொடுத்தல்.
- எல்லோருடனும் நல்ல உறவுகளை வைத்துக் கொள்ளல்.
- எந்தச் சந்தர்ப்பத்திலும் உணர்ச்சி வசப்படாதிருத்தல்.
- அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்காதிருத்தல்.
- பக்கசார்பற்ற வகையில் நடந்து கொள்ளுதல்.
- நிதி தொடர்பான விடயங்களில் நேர்மையாக இருத்தல்
- பாடசாலைச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்யாதிருத்தல்.
- பாடசாலை பற்றிய நல்ல மனப்பான்மைகளை மாணவர்களிடத்தில் ஏற்படுத்தல்.
- வேலைகளைத் திட்டமிடல்.
- பரீட்சைப் பேறுபேறுகளை உயர்த்துவதற்கு முயற்சித்தல்.
- எந்த விடயத்தையும் அறிவுபூர்வமாக சிந்திக்கவேண்டும்.
- பாடசாலையில் நடைபெற வேண்டிய சகல நிகழ்ச்சிகளையும் வருட ஆரம்பத்திலேயே திட்டமிட வேண்டும்.
- பாடசாலையில் கிடைக்கும் நிதிகளை முறையாக திட்டமிட்டு பாடசாலைக்கு மிக அத்தியாவசிய தேவைகளை முதலில் செய்யவேண்டும்.
- பாடசாலையோடு தொடர்புடையவர்களிடம் பாடசாலை வளர்ச்சிக்காக நிதிகளைச் சேகரித்துப் பாடசாலையின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை விரிவு படுத்தலாம்.
- வளர்ச்சியடைந்த பாடசாலைகளுடன் விளையாட்டு, கலை கலாச்சார கற்றல், கற்பித்தல் விடயங்களில் தொடர்புகளை தொடர்ந்து வைத்துக்கொள்ளவேண்டும்
- மாணவர்களின் வளர்ச்சியைப் பதிவேடுகளாக வைத்திருக்கவேண்டும்.
- ஆசிரிய மாணவர்களின் சுக துக்கங்களில் பங்குபற்றவேணடும்
- பாடசாலையின் அதிபரின் செயற் திறன் வாய்ந்த நடவடிக்கையிலும் அர்ப்பணிப்பிலும் தான் பாடசாலையின் வளர்ச்சியும், முன்னேற்றமும், அபிவிருத்தியும் தங்கியுள்ளது.

## கற்றலோடு தொடர்புடைய பழமொழிகள்

- ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது - காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
- சீன தேசம் சென்றாயினும் சீர் கல்வி பெறு.
- கற்றது கை மண்ணளவு கல்லாதது கடலளவு - கல்வி கரையில.
- கற்பதற்காக வாழ் - பாடையேறினும் ஏடது கைவிடேல்.
- கரு முதல் கல்லறை வரை-கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
- முயற்சி திருவினையாக்கும். கல்வியே சிறந்த முதலீடு.
- முயன்றால் முடியும் - முடியாது என்ற வார்த்தை மட்டுமே முடியாது.
- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது - சொல்லாதே செய்.
- இரக்கப் போனாலும் சிறக்கப் போ - முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்.
- அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது -
- இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
- ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு - புத்திமான் பலவான்
- வளரும் பயிர் முளையில் தெரியும்.
- பசித்திரு, தனித்திரு, விழித்திரு அப்போதே பதவி என்ற உயர்வை அடையலாம்.
- மாற்றம் மட்டுமே உலகில் மாற்றமில்லாதது.

### பொன்மொழிகள்

- நீ நீயாக இரு - உனக்கு நீயே நீதிபதி.
- உன்னை நீ திருத்து உலகம் தானாய் திருந்தும் - உண்மையே பேசு.
- உன்னை நீ அறிவாய். உன்னால் முடியும். உனக்குள் ஒருவனாய் இரு.
- உன்னைப் போன்றே பிறரையும் நேசி - உயர்ந்த சிந்தனையே. உயர்வைத் தரும்.
- உனக்குத் தெரியும் என்று எதையும் செல்லி விடாதே.உயர்ந்த உள்ளம் வேண்டும்-உணர்வு, உணர்ச்சி, உரிமை பிறரிடம் எதிர்பார்க்கக்கூடாது.
- உன்னை எந்த சூழ்நிலையிலும் தாழ்த்திக் கொள்ளாதே.
- உயர்ந்த உள்ளம் உள்ளவர்கள் உலகத்தையே உருவாக்கலாம்.
- உயர்வும் தாழ்வும் ஒருவனின் உள்ளத்திலேயே உருவாகிறது.
- உனக்கும் உன் உள்ளத்திற்கும் நடக்கும் போராட்டத்தின் வெளிப்பாடு முகத்தில் தெரியும்.
- உயர உயர பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகுமா?
- முயன்றால் முடியாதது எதுவும் இல்லை.
- "முயற்சியில்லாத பயிற்சியும் பயிற்சியில்லாத முயற்சியும் பயனற்றது"

## வாழ்க்கை பற்றி சில விடயங்கள்

- வாழ்க்கையை திட்டமிடுங்கள்; அதன்படி வாழ முயற்சிசெய்யுங்கள்.
- வாழ்க்கையில் எப்போதும் உண்மையாகவும், நேர்மையாகவும் இருங்கள்.
- வாழ்க்கையில் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பிறருக்கு உதவி செய்வதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.
- வாழும் காலத்தில் சாதி, மதம், இனம், மொழி என்பவற்றுக்கு அப்பால் வாழப் பழகவேண்டும்.
- வாழும்போதே நன்மையான விடயங்களை செய்யவேண்டும்.
- வாழ்க்கையில் கடவுள் நம்பிக்கையை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும்.
- வாழ்க்கையை வாழ முடியும் என்ற நம்பிக்கை வேண்டும்.
- நம்பிக்கைதான் வாழ்க்கை.
- போராட்டம் உடையதுதான் வாழ்க்கை.
- கல்லும் முள்ளும் உள்ளதுதான் வாழ்க்கை.
- இன்பமும் துன்பமும் உள்ளதுதான் வாழ்க்கை.
- மேடு பள்ளம் உள்ளதுதான் வாழ்க்கை.
- வெற்றி தோல்வி உள்ளதுதான் வாழ்க்கை.
- வாழ்க்கையை வாழ்ந்து காட்டவேண்டும்.
- வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக வாழவேண்டும்.
- வாழ்க்கையை அனுபவிக்கவேண்டும்.
- உலகில் சிறப்பாக வாழ்ந்தவர்களின் வரலாற்றைப் படிக்கவேண்டும்.
- வாழ்க்கையில் கஷ்டப்பட்டு முன்னேறியவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கவேண்டும்.

## மாணவர்கள் வீதியில் செல்லும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்

- எப்போதும் வலது பக்கத்தில் நடக்கவேண்டும்.
- பாதையை கடக்கும்போது மஞ்சள் கோட்டில் கடக்கவேண்டும்.
- வீதி சமிக்கைகளைக் கவனித்துச் செல்லவேண்டும்.
- செல்போனில் கதைத்துக்கொண்டு வீதியில் செல்லக்கூடாது.
- பாதைகளைக் கடக்கும்போது இருபக்கமும் பார்க்கவேண்டும்.
- வீதியில் இருக்கும் போலிசார் கட்டளைப்படி நடக்கப் பழகவேண்டும்.
- வீதிகளில் கூட்டமாக செல்வதை தவிர்க்கவேண்டும்.

## குடும்பத்தில் கணவன் மனைவி சந்தோசமாக வாழ்வதற்கான சில ஆலோசனைகள்

- இருவரும் அன்பு செலுத்தவேண்டும் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவேண்டும்.
- எல்லா விடயங்களிலும் திறந்த மனதுடன் செயற்படவேண்டும்.
- வாழ்க்கையில் ஒழிவு மறைவு இருக்கக்கூடாது.
- எக்காரணத்தைக் கொண்டும் எந்த விடயத்திலும் சந்தேகப்படக் கூடாது.
- கணவன் மனைவி மீதும், மனைவி கணவன் மீதும் சந்தேகப்படக் கூடாது
- இருவரும், பொய், களவு, ஏமாற்றம் செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இருவரும் மனம் விட்டுப் பேசவேண்டும்.
- மற்றவர்களைப் பார்த்து போலி வாழ்க்கையை வாழக் கூடாது - வாழ்க்கையைப் போலியாக வாழக் கூடாது.
- கணவனுக்குப் பிடிக்காத விடயங்களை மனைவியும், மனைவிக்குப் பிடிக்காத விடயங்களை கணவனும் செய்யக் கூடாது.
- முடிந்தளவு வெளியிடங்களில் சாப்பிடுதல், தங்குதல் போன்றவற்றைத் தவிர்க்கவேண்டும்.
- கணவன் மது அருந்துதல், புகைப்பிடித்தல் என்பவற்றைத் தவிர்க்கவேண்டும்
- அடிக்கடி நண்பர்களுடன் Party (களியாட்டங்களில்) ஈடுபட்டு வீட்டுக்கு நண்பர்களை அழைத்து வருவதை தவிர்க்கவேண்டும்.
- எந்த விடயத்திலும் இருவரும் அனுசரித்து நடந்து கொளள்ளவேண்டும்.
- திருமணம், விழாக்கள், வைபவங்களுக்கு முடியுமானவரை சேர்ந்து போக வேண்டும்.
- முழுக்குடும்பத்துடனும் ஒரு நேர உணவையாவது சேர்ந்து உண்ண வேண்டும்.
- இருவரும் உழைக்க வேண்டும், இருவரும் வீண் செலவுகளைத் தவிர்க்க வேண்டும் - இடம், பொருள், ஏவல் பார்த்து பேசவேண்டும்.
- நல்ல விடயங்களைச் செய்யும் போது இருவரும் பாராட்டவேண்டும்.
- குடும்பத்தில் விட்டுக் கொடுப்பு, சகிப்பு தன்மை, பொறுமை, புரிந்துணர்வு வேண்டும்.
- வரட்டுக் கௌரவம், போட்டி பொறாமை,வஞ்சகம், சூதுபோன்றவற்றைத் தவிர்க்கவேண்டும்.
- இருவரும் ஒருவரை ஒருவர் நம்பவேண்டும்.
- மனைவி பற்றியும், கணவன் பற்றியும் பிறரிடம் தாழ்வாகப் பேசக்கூடாது.
- கோபம்,பிரச்சினைகள் வரும்போது இருவரும் அமைதியாக இருக்க வேண்டும்.
- கோயில்கள், சுற்றுலாக்கள், உறவினர் வீடுகள், சொப்பிங் போன்றவற்றுக்கு போக வேண்டும் - வாழ்க்கையை வாழ்ந்து காட்டவேண்டும்.
- எந்தப் பிரச்சினைகள் எந்த விதத்தில் வந்தாலும் எதிர்த்துப் போராடி வாழ வேண்டும்.

## மது அருந்துவதால் ஏற்படும் பாதிப்புகள்

- உழைத்தப் பணம் வீணாகச் செலவு செய்யப்படும்.
- சுய நினைவு, சுய உணர்வு இல்லாமல் போகும்.
- தேவையற்ற பேச்சு, வாக்குவாதங்களில் ஈடுபடச்செய்யும்.
- தீய நண்பர்களுடன் பழகி தீய பழக்கவழக்கங்களைப் பழகவேண்டி ஏற்படும்.
- தினமும் ஏதாவது ஒரு வழியில் மது அருந்துவதற்காக பணத்தை தேட வேண்டிய நிலை ஏற்படும்.
- மது அருந்துவதற்காகக் கடன் பெறவேண்டிய நிலை ஏற்படும்.
- தன்னுடையக் குடும்ப, சமூக வேலைகளைத் திட்டமிட்டு செய்ய முடியாது போகும்.
- சமூகத்தில் குடிகாரன் என்ற கெட்ட பெயர் ஏற்படும்.
- குடும்பத்தையும், குடும்ப உறுப்பினர்களையும் கவனிக்கமுடியாது.
- பிள்ளைகளை நல்வழிப் படுத்த முடியாததுடன், பிள்ளைகள் தீய வழியில் செல்வதற்கு வழி ஏற்படும்.
- குடும்பத்தில் தினமும் வாக்குவாதங்கள், பிரச்சினைகள் ஏற்பட்டு குடும்ப அமைதி பாதிக்கப்படும்.
- குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உண்டாகும்.
- எதிர்காலத்தில் குடும்பத்தில் சேமிப்பு இருக்காது.மன அமைதி இருக்காது.
- உடல் ரீதியான பல பாதிப்புக்கள் ஏற்படும்.
- வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் நோய்வாய்பட்டு வைத்தியசாலைகளுக்கு செலவு செய்யவேண்டும்.
- மது அருந்துவதற்காக பொய், களவு, கொலைகள் கூட செய்வதற்கு துணிந்து விடுவார்கள்.
- மாரடைப்பு, ஆயுட்காலம் குறைதல், ஈரல் கருகிப் போகும் பாதிப்பு ஏற்படும்.
- கணவன் மனைவி பிள்ளைகளை பிரியவேண்டி ஏற்படும் (விவாகரத்து)
- பொலிஸ், கோர்ட் போன்றவற்றிற்கு போகவேண்டி ஏற்படும்.
- குடும்ப கௌரவம் பாதிக்கப்படும்.
- குடி குடியைக் கெடுக்கும்.
- குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சு.
- குடியினால் சீரழிந்த குடும்பங்கள் எத்தனை எத்தனை தெரியுமா?

## வாழ்க்கையில் சிக்கனமாக வாழப் பழகவேண்டும்

- வருமானத்தில் முதற் செலவு சேமிப்பாக இருக்கவேண்டும்.
- ஆடம்பரச் செலவுகளை முடியுமானவரை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.
- கிடைக்கும் வருமானத்தை திட்டமிட்டு செலவு செய்யப் பழகவேண்டும்.
- கடன் வாங்கி திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் விழா, பெருநாட்கள் என்பவற்றை செய்யக்கூடாது.
- ஆடம்பரமாகச் செலவு செய்பவர்கள் அதற்கான வருமானத்தை உழைக்கத் தெரிந்திருக்கவேண்டும்.
- வரவிற்கு ஏற்ப செலவுசெய்யவேண்டும்.
- வீட்டில் இருக்கும் மின்சார பொருட்களைத் தேவைக்கு ஏற்பபயன்படுத்த வேண்டும்.
- தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி, மின் விளக்குகளை தேவையான போதும் மட்டும் போடவேண்டும்.
- நீரையும், மின்சாரத்தையும் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும்.
- வீட்டுக்குப் பொருட்களை வாங்கும்போது முதலில் அத்தியாவசிய மானதை வாங்கவேண்டும்.
- பணத்தை முதலீடு செய்யும்போதும், சேமிக்கும்போதும் எதிர்காலத்தில் வருமானத்தைத் தரக்கூடிய சொத்துக்களில் சேமிக்கவேண்டும். (காணி, தங்கம், வீடு, வாகனம்)
- வட்டிக்குப் பணம் வாங்குவதை முடியுமானவரை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- வாழ்க்கையில் சிறு விடயங்களையும் திட்டமிட்டு செய்யப் பழக வேண்டும்.

## தூர இடங்களுக்கு பிரயாணம் செய்யும் போது பின்பற்ற வேண்டிய விடயங்கள்

- நேரத்திற்குப் புறப்படவேண்டும்.
- போகின்ற தினத்திற்கு முன்னரே சகல ஆயத்தங்களையும் செய்யவேண்டும்.
- தேவையான சகல பொருள்களையும் முதலில் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.
- முன்கூட்டியே போகின்ற வாகனத்தை (பஸ், கோச்சு, வாடகை வாகனம்) தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.
- பஸ், இரயில் நிலையத்திற்கு 15 நிமிடங்களுக்கு முன்னரே செல்லவேண்டும்.
- சிறு பிள்ளைகளுக்கு அளவானதும், முறையானதுமான உணவுகளைக் கொடுக்கவேண்டும்.

- சிறுவர்கள் காலைக்கடன்களை முடித்துக் கொள்ளவேண்டும்.
- வாந்தி வில்லை, சொப்பிங் பேக், தண்ணீர் போத்தல், உணவுகள் பனடோல் போன்றவற்றை எடுத்துச் செல்லவேண்டும்.
- தேவையான பணத்தை கவனமாக வைத்திருக்கவேண்டும்.
- போகின்ற இடத்தின் தொலைபேசி எண், விலாசம் என்பவற்றை குறித்து வைத்திருக்கவேண்டும்.
- முடிந்தளவு இரவு பயணத்தை ஒரு சிலர் தவிர்க்கவேண்டும்.
- மாற்றுடைகள், டோர்ச் லைட், குடை, துவாய், போன்றவற்றை எடுத்துச் செல்லவேண்டும்.
- வாசிப்பதற்கு நல்ல புத்தகங்களைக் கொண்டு செல்லவேண்டும்.

## கடைப்பிடிக்க வேண்டிய சுகாதாரப் பழக்கவழக்கங்கள்

- உணவு உண்பதற்கு முன் கைகளைக் கழுவுதல்.
- உணவு உண்ட பின் பல் துலக்குதல்.
- உணவு பண்டங்களை மூடி வைத்தல்.
- சரியான நேரத்தில் உணவு அருந்துதல்.
- சாப்பிட்டப் பின் நன்றாக வாயைக் கழுவுதல்.
- பழங்களை நன்றாகக் கழுவிய பின் உண்ணுதல்.
- பயன்படுத்தும் பாத்திரங்களை சுத்தமாக வைத்திருத்தல்.
- உணவில் கூடுதலாகப் பழங்கள், மரக்கறி சேர்த்தல்.
- இனிப்பு வகைகளை அடிக்கடி உண்பதைத் தவிர்த்தல்
- உணவு உண்ணும் போது சரியான நடைமுறைகளைப் பின்பற்றல்.
- கொதித்து ஆறிய நீரைப் பருகுதல்.
- போதியளவு நீர் அருந்துதல். தினமும் நீராடுதல்.
- தலை முடியை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருத்தல்.
- சுத்தமான ஆடைகளை அணிதல்.
- சுத்தமான கைக்குட்டையை உபயோகித்தல்
- நகங்களை அளவாக வெட்டுதல்.
- உடற் காயங்களில் தொற்று ஏற்படாது வைத்திருத்தல்
- சரியான நேரத்திற்கு நித்திரைக்குப் போதல், நித்திரை விட்டெழுதல்.
- மலங்கழித்த பின் சவர்க்காரம் இட்டு கை கழுவுதல்.
- சுத்தமான இடங்களில் உணவுப்பண்டங்களை வாங்குதல்.

தேடிச் சோறு நிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப் பருவம் மெய்திக் - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ?

*–பாரதி–*

## *கீதாசாரம்*

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய்?
அது வீணாவதற்கு,
எதைக் நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றவருடையதாகின்றது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

## ஒரு நல்ல மாணவனுக்கு இருக்க வேண்டிய பண்புகள்

ஒழுக்கம், கீழ்படிவு, பணிவு, மரியாதை, நேர்மை, தூய்மை, புத்திசாதுரியம், எளிமை, செயற்திறன், விட்டுக்கொடுப்பு, உதவி செய்தல், அன்பு, விசுவாசம், நம்பிக்கை, நன்றியுணர்வு, உண்மை, விடாமுயற்சி, நோக்கம், குறிக்கோள்.

## இளைஞர்கள் செய்யக்கூடிய தொழில்கள்

(சுய தொழில் வாய்ப்புகள்) வீட்டுத் தோட்டம், மரக்கறி பயிர் செய்தல் Auto Repairing, Cell Phone Repairing, Electric, வெல்டிங் சிறுவியாபாரம், மலர் வியாபாரம், Pots செய்தல், பால் வியாபாரம், இலைக் கஞ்சி, மணப் பெண் அலங்காரம், எழுத்துத்துறை, photograpy, பேக் ஒட்டுதல், மிக்சர், ஊறுகாய், மிளகாய் தூள், பத்தி கால் நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, தையல், Tution வகுப்புகள் நடத்துதல், கீரைத் தோட்டம், வாகனம் திருத்துதல் அச்சுத் தொழில் இன்னும்....

> "நீங்கள் எந்தப் பதவியில் இருக்கின்றீர்கள் என்பது
> முக்கியமல்ல; இருக்கின்ற பதவியில் என்ன செய்து
> கொண்டிருக்கின்றீர்கள் என்பதுதான் முக்கியம்"
>
> **- பெட்னார்க் -**

## மனிதன் மனிதனாக வாழ 18 விடயங்கள்

| | | |
|---|---|---|
| 1. மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள் | - | தாய் தந்தை |
| 2. மிக மிக நல்ல நாள் | - | இன்று |
| 3. மிக மிக பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| 4. மிகவும் வேண்டியது | - | பணிவு |
| 5. மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| 6. மிகவும் பெரிய தேவை | - | நம்பிக்கை |
| 7. மிகவும் கொடிய நோய் | - | பேராசை |
| 8. மிகவும் சுலபமானது | - | குற்றங்காணல் |
| 9. மிகவும் கீழ்த்தரமானது | - | பொறாமை |
| 10. நம்பக் கூடாதது | - | வதந்தி |
| 11. ஆபத்தை விளைவிக்கக் கூடியது | - | அதிக பேச்சு |
| 12. செய்யக் கூடாதது | - | நம்பிக்கைத் துரோகம் |
| 13. செய்யக் கூடியது | - | உதவி |
| 14. விலக்க வேண்டியது | - | சோம்பேறித்தனம் |
| 15. உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| 16. நழுவ விடக்கூடாதது | - | வாய்ப்பு |
| 17. பிரியக்கூடாதது | - | நட்பு |
| 18. மறக்கக் கூடாதது | - | நன்றி |

**தொகுப்பு :- இரா.சிவலிங்கம் - M.Phill**